தெய்வ தரிசனம் தேடும் மனம் தினம்

தெய்வ தரிசனம் தேடும் மனம் தினம்
தேவன் வரவிலே ஜீவன் உருகிடும் - 2
இதைத் தேடாத நாளில்லையே
இதைத் தேடாமல் வாழ்வில்லையே
இறைவா இறைவா என் இதயம் இணைவாய்- 2

1)
வாழ்வு வழங்கும் வல்லதேவன் வரவு என்னிலே
வசந்தம் என்றும் வசந்தம்
எந்தன் வாழ்வு தன்னிலே
வானதேவன் வார்த்தை இன்று வடிவமானதே
வானும் மண்ணும் அழிந்த போதும்
வாழும் என்னிலே
ஒளியே ஒளியே உலகின் ஒளியே
உயிரே உயிரே உயிரின் உயிரே
உமைப் பாடாத நாளில்லையே
உமைத் தேடாமல் வாழவில்லையே
இறைவா இறiவா என் இதயம் இணைவாய் - 2

2)
அன்புக்காக ஏங்கும் எந்தன் ஆசை ஓய்ந்திடும்
அழிவில்லாத அன்பு நேசம் அரவணைத்திடும்
நினைவில் ஆடும் நிழல்கள் யாவும் நிஜங்களாகிடும்
தீங்கில்லாத நிறைவு நேசம் அரவணைத்திடும்
ஒளியே ஒளியே உலகின் ஒளியே
உயிரே உயிரே உயிரின் உயிரே
உமைப் பாடாத நாளில்லையே
உமைத் தேடாமல் வாழ்வில்லையே
இறைவா இறைவா என் இதயம் இணைவாய்- 2